# ஸ்ரீ விநாயகர் 108 போற்றிகள்

ஓம் விநாயகனே போற்றி
ஓம் வினைகள் தீர்ப்பவனே போற்றி
ஓம் அரசமரத்தடி அமர்ந்தவனே போற்றி
ஓம் அகந்தை அழிப்பவனே போற்றி
ஓம் அறுகினில் மகிழ்பவனே போற்றி
ஓம் அச்சம் தவிர்ப்பவனே போற்றி
ஓம் ஆனை முகத்தோனே போற்றி
ஓம் ஆறுமுகன் சோதரனே போற்றி
ஓம் ஆதி மூலமே போற்றி
ஓம் ஆனந்த உருவே போற்றி

ஓம் இமவான் சந்ததியே போற்றி
ஓம் இடரைக் களைவோனே போற்றி
ஓம் ஈசன் மகனே போற்றி
ஓம் ஈகை உருவே போற்றி
ஓம் உண்மை வடிவே போற்றி
ஓம் உலக நாயகனே போற்றி
ஓம் ஊறும் களிப்பே போற்றி
ஓம் ஊழ்வினை அறுப்பவனே போற்றி
ஓம் எளியவனே போற்றி
ஓம் எந்தையே போற்றி

ஓம் எங்குமிருப்பவனே போற்றி
ஓம் எருக்கு அணிந்தவனே போற்றி
ஓம் ஏழை பங்காளனே போற்றி
ஓம் ஏற்றம் அளிப்பவனே போற்றி
ஓம் ஐயனே போற்றி
ஓம் ஐங்கரனே போற்றி
ஓம் ஒப்பிலாதவனே போற்றி
ஓம் ஒதுக்க முடியாதவனே போற்றி
ஓம் ஒளிமய உருவே போற்றி
ஓம் ஔவைக் கருளியவனே போற்றி

ஓம் கருணாகரனே போற்றி
ஓம் கரணத்தில் மகிழ்பவனே போற்றி
ஓம் கணேசனே போற்றி
ஓம் கணநாயகனே போற்றி
ஓம் கண்ணிற்படுபவனே போற்றி
ஓம் கலியுக நாதனே போற்றி

ஓம் கற்பகத்தருவே போற்றி
ஓம் கந்தனுக்கு தவியவனே போற்றி
ஓம் கிருபாநிதியே போற்றி
ஓம் கீர்த்தி அளிப்பவனே போற்றி

ஓம் குட்டில் மகிழ்பவனே போற்றி
ஓம் குறைகள் தீர்ப்பவனே போற்றி
ஓம் குணநிதியே போற்றி
ஓம் குற்றம் பொறுப்போனே போற்றி
ஓம் கூவிட வருவோய் போற்றி
ஓம் கூத்தன் மகனே போற்றி
ஓம் கொள்ளை கொள்வோனே போற்றி
ஓம் கொழுக்கட்டைப் பிரியனே போற்றி
ஓம் கோனே போற்றி
ஓம் கோவிந்தன் மருமகனே போற்றி

ஓம் சடுதியில் வருபவனே போற்றி
ஓம் சங்கரன் புதல்வனே போற்றி
ஓம் சங்கடஹரனே போற்றி
ஓம் சதுர்த்தி நாயகனே போற்றி
ஓம் சிறிய கண்ணோனே போற்றி
ஓம் சித்தம் கவர்ந்தோனே போற்றி
ஓம் சுருதிப் பொருளே போற்றி
ஓம் சுந்தரவடிவே போற்றி
ஓம் ஞாலம் காப்பவனே போற்றி
ஓம் ஞான முதல்வனே போற்றி

ஓம் தந்தம் உடைந்தவனே போற்றி
ஓம் தந்தத்தாற் எழுதியவனே போற்றி
ஓம் தும்பிக்கை உடையாய் போற்றி
ஓம் துயர் துடைப்பவனே போற்றி
ஓம் தெருவெலாம் காப்பவனே போற்றி
ஓம் தேவாதி தேவனே போற்றி
ஓம் தொந்தி விநாயகனே போற்றி
ஓம் தொழுவோ நாயகனே போற்றி
ஓம் தோணியே போற்றி
ஓம் தோன்றலே போற்றி

ஓம் நம்பியே போற்றி
ஓம் நாதனே போற்றி
ஓம் நீறணிந்தவனே போற்றி
ஓம் நீர்க்கரையமர்ந்தவனே போற்றி

ஓம் பழத்தை வென்றவனே போற்றி
ஓம் பாரதம் எழுதியவனே போற்றி
ஓம் பரம்பொருளே போற்றி
ஓம் பரிபூரணனே போற்றி
ஓம் பிரணவமே போற்றி
ஓம் பிரம்மசாரியே போற்றி

ஓம் பிள்ளையாரே போற்றி
ஓம் பிள்ளையார்பட்டியானே போற்றி
ஓம் பிறவிப்பிணி தீர்ப்பவனே போற்றி
ஓம் பிள்ளைகளை ஈர்ப்பவனே போற்றி
ஓம் புதுமை வடிவே போற்றி
ஓம் புண்ணியனே போற்றி
ஓம் பெரியவனே போற்றி
ஓம் பெரிய உடலோனே போற்றி
ஓம் பேரருளாளனே போற்றி
ஓம் பேதம் அறுப்போனே போற்றி

ஓம் மஞ்சளில் இருப்பவனே போற்றி
ஓம் மகிமையளிப்பவனே போற்றி
ஓம் மகாகணபதியே போற்றி
ஓம் மகேசுவரனே போற்றி
ஓம் முக்குறுணி விநாயகனே போற்றி
ஓம் முதலில் வணங்கப்படுவோனே போற்றி
ஓம் முறக்காதோனே போற்றி
ஓம் முழுமுதற்கடவுளே போற்றி
ஓம் முக்கணன் மகனே போற்றி
ஓம் முக்காலம் அறிந்தானே போற்றி

ஓம் மூத்தோனே போற்றி
ஓம் மூஞ்சுறு வாகனனே போற்றி
ஓம் வல்லப கணபதியே போற்றி
ஓம் வரம்தரு நாயகனே போற்றி
ஓம் விக்னேஸ்வரனே போற்றி
ஓம் வியாஸன் சேவகனே போற்றி
ஓம் விடலைக்காய் ஏற்பவனே போற்றி
ஓம் வெற்றியளிப்பவனே போற்றி

## *முருகன் 108 போற்றி!!!*

ஓம் ஆறுமுகனே போற்றி

ஓம் ஆண்டியே போற்றி
ஓம் அரன் மகனே போற்றி
ஓம் அபிஷேகப் பிரியனே போற்றி
ஓம் அழகா போற்றி
ஓம் அபயா போற்றி
ஓம் ஆதிமூலமே போற்றி
ஓம் ஆவினன் குடியோய் போற்றி
ஓம் இறைவனே போற்றி
ஓம் இளையவனே போற்றி *(10)*

ஓம் இடும்பனை வென்றவனே போற்றி
ஓம் இடரைக் களைவோனே போற்றி
ஓம் ஈசன் மைந்தனே போற்றி
ஓம் ஈராறு கண்ணனே போற்றி
ஓம் உமையவள் மகனே போற்றி
ஓம் உலக நாயகனே போற்றி
ஓம் ஐயனே போற்றி
ஓம் ஐங்கரன் தம்பியே போற்றி
ஓம் ஒன்றே போற்றி
ஓம் ஓங்காரனே போற்றி *(20)*

ஓம் ஓதுவார்க்கினியனே போற்றி
ஓம் ஔவைக்கருளியவனே போற்றி
ஓம் கருணாகரனே போற்றி
ஓம் கதிர் வேலவனே போற்றி
ஓம் கந்தனே போற்றி
ஓம் கடம்பனே போற்றி
ஓம் கவசப்பிரியனே போற்றி
ஓம் கார்த்திகை மைந்தனே போற்றி
ஓம் கிரிராஜனே போற்றி
ஓம் கிருபாநிதியே போற்றி *(30)*

ஓம் குகனே போற்றி
ஓம் குமரனே போற்றி
ஓம் குன்றம் அமர்ந்தவனே போற்றி
ஓம் குறத்தி நாதனே போற்றி
ஓம் குரவனே போற்றி
ஓம் குருபரனே போற்றி
ஓம் சங்கரன் புதல்வனே போற்றி
ஓம் சஷ்டி நாயகனே போற்றி
ஓம் சரவணபவனே போற்றி
ஓம் சரணாகதியே போற்றி *(40)*

ஓம் சத்ரு சங்காரனே போற்றி
ஓம் சர்வேஸ்வரனே போற்றி
ஓம் சிக்கல்பதியே போற்றி
ஓம் சிங்காரனே போற்றி
ஓம் சுப்பிரமணியனே போற்றி
ஓம் சுரபூபதியே போற்றி
ஓம் சுந்தரனே போற்றி
ஓம் சுகுமாரனே போற்றி
ஓம் சுவாமிநாதனே போற்றி
ஓம் சுருதிப் பொருளுரைத்தவனே போற்றி (50)

ஓம் சூழ் ஒளியே போற்றி
ஓம் சூரசம்ஹாரனே போற்றி
ஓம் செல்வனே போற்றி
ஓம் செந்தூர்க்காவலனே போற்றி
ஓம் சேகரனே போற்றி
ஓம் சேவகனே போற்றி
ஓம் சேனாபதியே போற்றி
ஓம் சேவற்கொடியோனே போற்றி
ஓம் சொற்பதங்கடந்தவனே போற்றி
ஓம் சோலையப்பனே போற்றி (60)

ஓம் ஞானியே போற்றி
ஓம் ஞாயிறே போற்றி
ஓம் ஞாலம் காப்பவனே போற்றி
ஓம் ஞானோபதேசியே போற்றி
ஓம் தணிகாசலனே போற்றி
ஓம் தயாபரனே போற்றி
ஓம் தண்டாயுதபாணியே போற்றி
ஓம் தகப்பன் சாமியே போற்றி
ஓம் திருவே போற்றி
ஓம் திங்களே போற்றி (70)

ஓம் திருவருளே போற்றி
ஓம் தினைப்பணம் புகுந்தோய் போற்றி
ஓம் துணைவா போற்றி
ஓம் துரந்தரா போற்றி
ஓம் தென்பரங்குன்றனே போற்றி
ஓம் தெவிட்டா இன்பமே போற்றி
ஓம் தேவாதி தேவனே போற்றி
ஓம் தேவசேனாபதியே போற்றி

ஓம் தேவனே போற்றி
ஓம் தேயனே போற்றி *(80)*

ஓம் நாதனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நிறணந்தவனே போற்றி
ஓம் பிரணவமே போற்றி
ஓம் பரப்பிரம்மமே போற்றி
ஓம் பழனியாண்டவனே போற்றி
ஓம் பாலகுமாரனே போற்றி
ஓம் பன்னிரு கையனே போற்றி
ஓம் பகை ஒழிப்பவனே போற்றி
ஓம் போகர் நாதனே போற்றி *(90)*

ஓம் போற்றப்படுவோனே போற்றி
ஓம் மறை நாயகனே போற்றி
ஓம் மயில் வாகனனே போற்றி
ஓம் மகா சேனனே போற்றி
ஓம் மருத மலையானே போற்றி
ஓம் மால் மருகனே போற்றி
ஓம் மாவித்தையே போற்றி
ஓம் முருகனே போற்றி
ஓம் மூவாப் பொருளே போற்றி
ஓம் யோக சித்தியே போற்றி *(100)*

ஓம் வயலூரானே போற்றி
ஓம் வள்ளி நாயகனே போற்றி
ஓம் விறலிமலையானே போற்றி
ஓம் வினாயகர் சோதரனே போற்றி
ஓம் வேலவனே போற்றி
ஓம் வேதமுதல்வனே போற்றி
ஓம் கலியுக வரதனே போற்றி
ஓம் புண்ணிய மூர்த்தியே போற்றி *(108)*

முருகனுக்கு அரோகரா!!!

## முருகன் 108 போற்றி

ஓம் அழகா போற்றி
ஓம் அறிவே போற்றி
ஓம் அரன் மகனே போற்றி

ஓம் அயன்மால் மருகா போற்றி

ஓம் சக்திவேலவா சரவணா போற்றி
ஓம் முக்தி அருளும் முருகா போற்றி
ஓம் பன்னிருகை வேலவா போற்றி
ஓம் பவழ வாய் சிரிப்பு பாலகா போற்றி

ஓம் ஆறிரு தடந்தோள் போற்றி
ஓம் ஆறெழுத்து மந்த்ரம் போற்றி
ஓம் இடும்பனை வென்றவனே போற்றி
ஓம் இடர் களைவோனே போற்றி

ஓம் உமையவள் மகனே போற்றி
ஓம் உலக நாயகனே போற்றி
ஓம் ஐயனே போற்றி அருளே போற்றி
ஓம் ஐங்கரன் தம்பியே போற்றி

ஓம் ஓம்கார சொருபனே போற்றி
ஓம் மூலப்பொருளே குகனே போற்றி
ஓம் ஓதுவார்க் கினியனே போற்றி
ஓம் ஓங்காரத்துள் வளர் ஒளியே போற்றி

ஓம் திருவடி தொழுதிட அருள்வாய் போற்றி
ஓம் குருவடிவான குருவின் உருவே போற்றி
ஓம் பக்தர்கள் போற்றும் பழம் நீ போற்றி
ஓம் சித்தர்கள் வசமான செல்வேள் போற்றி

ஓம் தேவர்கள் சேனைத் தலைவா போற்றி
ஓம் தேவகுஞ்சரி மணாளா போற்றி
ஓம் வெண்நீறணியும் விசாகா போற்றி
ஓம் கண்ணின் மணியே கனியே போற்றி

ஓம் தண்டபாணி எம் தெய்வமே போற்றி
ஓம் குண்டல மொளிரும் சுந்தரா போற்றி
ஓம் வேதப் பொருளே வேந்தே போற்றி
ஓம் அருந்தமிழ் வளர்த்த ஐயா போற்றி

ஓம் செந்தில் உறையும் ஸ்கந்த போற்றி
ஓம் பழனி பதிவாழ் பாலக போற்றி
ஓம் இருளிடர் போக்கும் பகலவா போற்றி
ஓம் இன்பமாம் வீடருள் இறைவா போற்றி

ஓம் அன்பின் உருவமே எம்அரசே போற்றி
ஓம் ஒளவைக் கருளியவனே போற்றி
ஓம் சேந்தா குறிஞ்சி வேந்தா போற்றி
ஓம் கந்தா கடம்பா கார்த்திகேயா போற்றி

ஓம் கருணாகரனே போற்றி
ஓம் கதிர் வேலவனே போற்றி
ஓம் மூலப்பொருளே முருகா போற்றி
ஓம் சூரனுக் கருளிய சேனாபதியே போற்றி

ஓம் குன்று தோறாடும் குமரா போற்றி
ஓம் அறுபடை விடுடையவா போற்றி
ஓம் கார்த்திகை மைந்தனே போற்றி
ஓம் கந்தசஷ்டி நாயக போற்றி

ஓம் இதயக் கோயிலில் இருப்பாய் போற்றி
ஓம் பக்தர்தம் பகை ஒழிப்பவனே போற்றி
ஓம் மகா சேனனே போற்றி
ஓம் மயில் வாகனனே போற்றி

ஓம் வடிவேலுடனே வருவாய் போற்றி
ஓம் அடியார் துயரம் களைவாய் போற்றி
ஓம் வளமான வாழ்வு தருவாய் போற்றி
ஓம் வள்ளி தெய்வானை மணாளா போற்றி

ஓம் செஞ்சுடர் மேனிச் செவ்வேள் போற்றி
ஓம் மலைமகட் கிளைய மகனே போற்றி
ஓம் அமிர்தாம் தமிழின் தலைவர் போற்றி
ஓம் தமிழர் தம் கருணை மிகு இறைவா போற்றி

ஓம் ஆடும் அயில்வேல் அரசே போற்றி
ஓம் வந்தருள் செய் வடிவேலவா போற்றி
ஓம் கலியுக வரதா கந்தா போற்றி
ஓம் கவலைக் கடலை களைவோய் போற்றி

ஓம் தந்தைக்கு மந்த்ரம் உரைத்தவா போற்றி
ஓம் எந்தனுக்கு இரங்கி அருள்வாய் போற்றி
ஓம் சைவம் வளர்த்த சம்பந்தா போற்றி
ஓம் சரவணபவ சண்முகா போற்றி

ஓம் வேடர் தம் கொடி மணாளா போற்றி
ஓம் வனத்தில் வேடனாய் வந்தாய் போற்றி
ஓம் புனத்தினில் ஆண்டியாய் வந்தவா போற்றி
ஓம் தேன்திணைமா நெய்வேத்யா போற்றி

ஓம் தெவிட்டா இன்பமே தென்றலே போற்றி
ஓம் தேவாதி தேவனே தெய்வமே போற்றி
ஓம் போகர் நாதனே பொலிவே போற்றி
ஓம் போற்றப் படுவோனே பொருளே போற்றி

ஓம் புண்ணிய மூர்த்தியே வரதா போற்றி

ஓம் யோக சித்தியே அழகே போற்றி
ஓம் பழனியாண்டவனே பாலகா போற்றி
ஓம் தென்பரங் குன்றோனே தேவா போற்றி

ஓம் கருணைமொழி போரூர்க் கந்தா போற்றி
ஓம் அருணகிரிக் கன்பு அருளினை போற்றி
ஓம் குறிஞ்சி நிலக் கடவுளே போற்றி
ஓம் குறுமுனி தனக்கருள் குருவே போற்றி

ஓம் தணிகாசலம் வுறை சண்முகா போற்றி
ஓம் சிக்கல் மேவிய சிங்காரா போற்றி
ஓம் நக்கீரர்க் கருள் நாயகா போற்றி
ஓம் விராலி மலையுறு வேலவா போற்றி

ஓம் திருக்கழுக் குன்றின் செல்வா போற்றி
ஓம் மணம்கமழ் கடம்ப மலையாய் போற்றி
ஓம் குன்றக்குடி அமர் குகனே போற்றி
ஓம் குமரகுரு புகழ் அழகா போற்றி

ஓம் கதிர் காமத்துறை கடவுளே போற்றி
ஓம் துதிபுரி அன்பென் துணையே போற்றி
ஓம் பழனிப் பதிவாழ் பண்டித போற்றி
ஓம் செந்தூர் பதிவாழ் சுந்தரா போற்றி

ஓம் மருதாசல மூர்த்தியே மகிழ்வே போற்றி
ஓம் கந்தாஸ்ரமம் நிறை கந்தா போற்றி
ஓம் பழமுதிர்த் சோலைப் பதியே போற்றி
ஓம் பத்துமலை முத்துக்குமார போற்றி

ஓம் ஔவையின் பைந்தமிழ் கேட்டவா போற்றி
ஓம் அருமையின் எளிய அழகே போற்றி
ஓம் இரு மயில் மணந்த ஏறே போற்றி
ஓம் அருள்சேர் இருவினை நீக்குவாய் போற்றி

ஓம் நீங்காப் புகழுடை நிமலா போற்றி
ஓம் திருப் புகழ் விருப்புடைத் தேவா போற்றி
ஓம் அருட்பெரும் ஜோதி ஆண்டவா போற்றி
ஓம் போற்றி... போற்றி... ஜெய ஜெய வேலவா போற்றி

# மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் போற்றி

1. ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
2. ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
3. ஓம் அருமறையின் வரம்பே போற்றி
4. ஓம் அறம்வளர்க்கும் அம்மையே போற்றி
5. ஓம் அரசிளங்குமரியே போற்றி
6. ஓம் அப்பர்பிணி மருந்தே போற்றி
7. ஓம் அமுத நாயகியே போற்றி
8. ஓம் அருந்தவ நாயகியே போற்றி
9. ஓம் அருள்நிறை அம்மையே போற்றி
10. ஓம் ஆலவாய்க்கரசியே போற்றி
11. ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
12. ஓம் ஆதியின் பாதியே போற்றி
13. ஓம் ஆலால சுந்தரியே போற்றி
14. ஓம் ஆனந்தவல்லியே போற்றி
15. ஓம் இளவஞ்சிக்கொடியே போற்றி
16. ஓம் இமயத்தரசியே போற்றி
17. ஓம் இடபத்தோன் துணையே போற்றி
18. ஓம் ஈசுவரியே போற்றி
19. ஓம் உயிர் ஓவியமே போற்றி
20. ஓம் உலகம்மையே போற்றி
21. ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
22. ஓம் எண்திசையும் வென்றோர் போற்றி
23. ஓம் ஏகன் துணையே போற்றி
24. ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
25. ஓம் ஐயந்தீர்ப்பாய் போற்றி
26. ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
27. ஓம் ஓங்காரசுந்தரியே போற்றி
28. ஓம் கற்றோர்க்கினியோய் போற்றி
29. ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
30. ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி
31. ஓம் கல்யாண சுந்தரியே போற்றி
32. ஓம் கனகமணிக் குன்றே போற்றி
33. ஓம் கற்பின் அரசியே போற்றி
34. ஓம் கருணையூற்றே போற்றி
35. ஓம் கல்விக்கு வித்தே போற்றி
36. ஓம் கனகாம்பிகையே போற்றி
37. ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
38. ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
39. ஓம் காட்சிக்கினியோய் போற்றி

40.ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
41.ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
42.ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
43.ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
44.ஓன் கூடற்கலாப மயிலே போற்றி
45.ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி
46.ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
47.ஓம் சக்தி வடிவே போற்றி
48.ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
49.ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
50.ஓம் சித்தந்தெளிவிப்பாய் போற்றி
51.ஓம் சிவயோக நாயகியே போற்றி
52.ஓம் சிவானந்த வல்லியே போற்றி
53.ஓம் சிங்கார வல்லியே போற்றி
54.ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
55.ஓம் செல்வத்துக்கரசியே போற்றி
56.ஓம் சேனைத் தலைவியே போற்றி
57.ஓம் சொக்கர் நாயகியே போற்றி
58.ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி
59.ஓம் ஞானாம்பிகையே போற்றி
60.ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி
61.ஓம் தமிழர்குலச் சுடரே போற்றி
62.ஓம் தண்டமிழ்த்தாயே போற்றி
63.ஓம் திருவுடை யம்மையே போற்றி
64.ஓம் திசையெல்லாம் புரந்தாய் போற்றி
65.ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
66.ஓம் திருநிலை நாயகியே போற்றி
67.ஓம் தீந்தமிழ்ச் ச்சுவையே போற்றி
68.ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
69.ஓம் தென்னவன் செவ்வியே போற்றி
70.ஓம் தேன்மொழியம்மையே போற்றி
71.ஓம் தையல்நாயகியே போற்றி
72.ஓம் நற்கனியின் சுவையே போற்றி
73.ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
74.ஓம் நல்ல நாயகியே போற்றி
75.ஓம் நீலாம்பிகையே போற்றி
76.ஓம் நீதிக்கரசியே போற்றி
77.ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
78.ஓம் பழமறையின் குருந்தே போற்றி
79.ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
80.ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி

*81.*ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
*82.*ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
*83.*ஓம் பசுபதி நாயகியே போற்றி
*84.*ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
*85.*ஓம் பாண்டிமா தேவியே போற்றி
*86.*ஓம் பார்வதி அம்மையே போற்றி
*87.*ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
*88.*ஓம் பெரியநாயகியே போற்றி
*89.*ஓம் பொன்மயிலம்மையே போற்றி
*90.*ஓம் பொற்கொடி அம்மையே போற்றி
*91.*ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
*92.*ஓம் மங்கள நாயகியே போற்றி
*93.*ஓம் மழலைக் கிளியே போற்றி
*94.*ஓம் மனோன்மணித்தாயே போற்றி
*95.*ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
*96.*ஓம் மாயோன் தங்கையே போற்றி
*97.*ஓம் மாணிக்கவல்லியே போற்றி
*98.*ஓம் மீனவர்கோன் மகளே போற்றி
*99.*ஓம் மீனாட்சியம்மையே போற்றி
*100.*ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
*101.*ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி
*102.*ஓம் யாழ்மொழியம்மையே போற்றி
*103.*ஓம் வடிவழகம்மையே போற்றி
*104.*ஓம் வேலனுக்கு வேல் தந்தாய் போற்றி
*105.*ஓம் வேதநாயகியே போற்றி
*106.*ஓம் வையகம் வாழ்விப்போய் போற்றி
*107.*ஓம் அம்மையே அம்பிகையே போற்றி
*108.*ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி

## *108* துர்கா போற்றி

ஓம் துர்கையே போற்றி
ஓம் அன்னையே போற்றி
ஓம் அக்நீஸ்வரியே போற்றி
ஓம் அஷ்டமி நாயகியே போற்றி
ஓம் அவதூறு அழிப்பவளே போற்றி
ஓம் அசுரர்க்கு எமனே போற்றி
ஓம் அன்பர்க்கு எளியவளே போற்றி
ஓம் அமரரைக் காப்பவளே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அறக்காவலே போற்றி *( 10 )*

ஓம் அபகரத்தாளே போற்றி
ஓம் ஆதார சக்தியே போற்றி
ஓம் இறைவியே போற்றி
ஓம் இச்சா சக்தியே போற்றி
ஓம் ஈர்ப்பவளே போற்றி
ஓம் ஈடிலாளே போற்றி
ஓம் நாக தேவதையே போற்றி
ஓம் உன்மத்த பங்கியே போற்றி
ஓம் எண்கரத்தாளே போற்றி
ஓம் எட்டாக்குழலியே போற்றி ( 20 )

ஓம் எலுமிச்சை விரும்பியே போற்றி
ஓம் எதிர்ப்பைக் குலைப்பவளே போற்றி
ஓம் ஏழ்மை அகற்றுபவளே போற்றி
ஓம் ஏவல் குலைப்பவளே போற்றி
ஓம் ஒளிர்பவளே போற்றி
ஓம் ஓங்காரியே போற்றி
ஓம் கம்பீர உருவமே போற்றி
ஓம் கவலை நீக்குபவளே போற்றி
ஓம் காளியே போற்றி
ஓம் கதாயுததாரியே போற்றி ( 30 )

ஓம் கபாலியே போற்றி
ஓம் காப்பவளே போற்றி
ஓம் கிரிதுர்க்கையே போற்றி
ஓம் கிருஷ்ண சகோதரியே போற்றி
ஓம் குமாரியே போற்றி
ஓம் குறுநகையாளே போற்றி
ஓம் குங்குமப் பிரியையே போற்றி
ஓம் குலக்காவலே போற்றி
ஓம் க்ரியா சக்தியே போற்றி
ஓம் கோள்வினை தீர்ப்பவளே போற்றி ( 40 )

ஓம் சண்டிகேஸ்வரியே போற்றி
ஓம் சர்வ சக்தியே போற்றி
ஓம் சந்தனப் பிரியையே போற்றி
ஓம் சர்வ அலங்காரியே போற்றி
ஓம் சாமுண்டியே போற்றி
ஓம் சர்வாயுததாரியே போற்றி
ஓம் சிவதுர்க்கையே போற்றி
ஓம் வேல்கண்ணியே போற்றி
ஓம் சிம்மவாகினியே போற்றி
ஓம் சித்தி அளிப்பவளே போற்றி ( 50 )

ஓம் ச்யாமளையே போற்றி
ஓம் சீதளையே போற்றி

ஓம் செம்மேனியலே போற்றி
ஓம் செவ்வண்ணப்பிரியையே போற்றி
ஓம் ஜெயதேவியே போற்றி
ஓம் ஜோதிக்கனலே போற்றி
ஓம் ஞானசக்தியே போற்றி
ஓம் ஞாலச்சுவலே போற்றி
ஓம் தற்பரமே போற்றி
ஓம் தயாபரியே போற்றி *( 60 )*

ஓம் திருவுருவே போற்றி
ஓம் திரிசூலியே போற்றி
ஓம் தீதெல்லாம் அழிப்பவளே போற்றி
ஓம் தீனர்க்காவலே போற்றி
ஓம் துஷ்டர்க்குத் தீயே போற்றி
ஓம் துர்கனை அழித்தவளே போற்றி
ஓம் துக்கம் தீர்ப்பவளே போற்றி
ஓம் நலமளிப்பவளே போற்றி
ஓம் நந்தர் குலக்கொழுந்தே போற்றி
ஓம் நவசக்தியே போற்றி *( 70 )*

ஓம் நவகோணத்தில் உறைபவளே போற்றி
ஓம் நிமலையே போற்றி
ஓம் நிலவினை அணிந்தவளே போற்றி
ஓம் நிறைவே போற்றி
ஓம் எங்கும் நிறைந்தவளே போற்றி
ஓம் படைத்தவளே போற்றி
ஓம் பாலிப்பவளே போற்றி
ஓம் பைரவியே போற்றி
ஓம் பயநாசினியே போற்றி
ஓம் பிரம்மசாரிணியே போற்றி *( 80 )*

ஓம் பயங்கரியே போற்றி
ஓம் புவநேஸ்வரியே போற்றி
ஓம் பூஜிக்கப்படுபவளே போற்றி
ஓம் மலநாசினியே போற்றி
ஓம் மஹிஷாசுரமர்தினியே போற்றி
ஓம் மங்கள வடிவே போற்றி
ஓம் மகேஸ்வரியே போற்றி
ஓம் மங்கையர்க்கரசியே போற்றி
ஓம் நல்மகவு அளிப்பவளே போற்றி
ஓம் மாதர்துணையே போற்றி *( 90 )*

ஓம் மாங்கல்யம் காப்பவளே போற்றி
ஓம் முக்கண்ணியே போற்றி
ஓம் முக்திஅளிப்பவளே போற்றி
ஓம் மூத்தவளே போற்றி
ஓம் மூலப்பொருளே போற்றி

ஓம் மூவுலகத் தாயே போற்றி
ஓம் மூவுலகும் வென்றவளே போற்றி
ஓம் யசோதபுத்ரியே போற்றி
ஓம் யமபயம் தீர்ப்பவளே போற்றி
ஓம் ராகுகால தேவதையே போற்றி *( 100 )*

ஓம் ரௌத்ரியே போற்றி
ஓம் வல்லவளே போற்றி
ஓம் வாராஹியே போற்றி
ஓம் வீரஉருவமே போற்றி
ஓம் விஷ்ணு துர்க்கையே போற்றி
ஓம் வையகக்காப்பே போற்றி
ஓம் வைஷ்ணவியே போற்றி
ஓம் வெற்றி அளிப்பவளே போற்றி..!! *( 108 )*

## *108* திருவிளக்கு போற்றி

பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
முற்றறிவு ஒளியாய் மிளிர்ந்தாய் போற்றி
மூவுலகும் நிறைந்திருந்தாய் போற்றி
வரம்பில் இன்பமாய் வளர்ந்திருந்தாய் போற்றி
இயற்கையாய் அறிவொளி ஆனாய் போற்றி
ஈரேழுலகும் ஈன்றாய் போற்றி
பிறர் வயமாகாப் பெரியோய் போற்றி
பேரின்பப் பெருக்காய் பொலிந்தாய் போற்றி

பேரருள் கடலாம் பொருளே போற்றி
முடிவில் ஆற்றல் உடையாய் போற்றி
மூவுலகும் தொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி
ஓமெனும் பொருளாய் உள்ளோய் போற்றி
இருள்கெடுத்து இன்பருள் ஈந்தாய் போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
வளமை நல்கும் வல்லியே போற்றி
அறம்வளர் நாயகி அம்மையே போற்றி.

மின்னொளி அம்மையாம் விளக்கே போற்றி
மண்ஒளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
தையல்நாயகித் தாயே போற்றி
தொண்டர்கள் அகத்தமர் தூமணி போற்றி
முக்கண் சுடரின் முதல்வி போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
சூளாமணியே சுடரொளி போற்றி
இருளொழித்து இன்பமும் ஈவோய் போற்றி
அருள்மொழிந்து எம்மை ஆள்வோய் போற்றி
அறிவினிக்கு அறிவாய் ஆனாய் போற்றி

இல்லக விளக்காம் இறைவி போற்றி
இடரைக் களையும் இயல்பினாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவி போற்றி
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி
அருமறை பொருளாம் ஆதி போற்றி
தூண்டுசுடர் அனைய ஜோதி போற்றி
ஜோதியே போற்றி சுடரே போற்றி
ஓதும் உள்ளொளி விளக்கே போற்றி
இருள் கெடுக்கும் இல்லக விளக்கே போற்றி
சொல்லாக விளக்காம் ஜோதி போற்றி .

பலர்காண் பல்லக விளக்கே போற்றி
நல்லக நமச்சிவாய விளக்கே போற்றி
உவப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி
உணர்வு சூழ் கடந்தோர் விளக்கே போற்றி
உடம்பெனும் மனையாக விளக்கே போற்றி
உள்ளத்தகழி விளக்கே போற்றி
மடம்படு உணர்நெய் விளக்கே போற்றி
உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி
இடர்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே போற்றி

ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
அளவில்லா அளவுமாகும் விளக்கே போற்றி
ஜோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி
தில்லைப் பொதுநட விளக்கே போற்றி
கற்பனை கடந்த ஜோதி போற்றி
கருணை உருவாம் விளக்கே போற்றி
அற்புதக் கோல விளக்கே போற்றி
அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
சிற்பர வ்யோம விளக்கே போற்றி
பொற்புடன் நடம்செய் விளக்கே போற்றி

உள்ளத்து இருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி
பெருக அருள் சுரக்கும் பெரும போற்றி
இருள்சேர் இருவினை எரிவாய் போற்றி
அருவே உருவே அருவுருவே போற்றி
நந்தா விளக்கே நாயகி போற்றி
செந்தாமரைத் தாள் தந்தாய் போற்றி
தீப மங்கள ஜோதி போற்றி .
மதிப்பவர் மாமணி விளக்கே போற்றி

பாகம் பிரியா பராபரை போற்றி
ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி
ஏகமுகம் நடம்செய் எம்மான் போற்றி
ஊழிஊழி உள்ளோய் போற்றி
ஆழியான் காணா அடியோய் போற்றி
ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
அந்தமில் இன்பம் அருள்வோய் போற்றி
முந்தை வினையை முடிப்போய் போற்றி
பொங்கும் கீர்த்தி பூரணி போற்றி
தன்னருள் சுரக்கும் தாயே போற்றி..

அருளே உருவாய் அமைந்தோய் போற்றி
இருநில மக்கள் இறைவி போற்றி
குருவென ஞானம் கொடுப்போய் போற்றி
ஆறுதல் எமக்கிங்கு அளிப்பாய் போற்றி
தீதெலாம் தீர்க்கும் திருவே போற்றி
பக்தியில் ஆழ்ந்த பரமே போற்றி
எத்திக்கும் துதி ஏய்ந்தாய் போற்றி
அஞ்சேல் என்றருளும் அன்பே போற்றி
தஞ்சம் என்றவரை சார்வோய் போற்றி
ஓதுவார் அகத்துறை ஒளியே போற்றி

ஓங்காரத்து உள்ளொளி விளக்கே போற்றி
எல்லா உலகமும் ஆனாய் போற்றி
பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி
புகழ்சேவடி என்மேல் வைத்தோய் போற்றி
செல்வாய் செல்வம் தருவாய் போற்றி
பூங்கழல் விளக்கே போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
செல்வம் கல்வி சிறப்பருள் போற்றி
நல்லன்பு ஒழுக்கம் நல்குக போற்றி

விளக்கிட்டார்க்கு மெய்நெறி விளக்குவாய் போற்றி
நலமெலாம் உயிர்க்கு நல்குக போற்றி
தாயே நின்னருள் தந்தாய் போற்றி
தூய நின்திருவடி தொழுதனம் போற்றி
போற்றி என்பார் அமரர் விளக்கே போற்றி
போற்றி என்பார் மனிதர் விளக்கே போற்றி
போற்றிஎன் அன்பொளி விளக்கே போற்றி
போற்றி போற்றி திருவிளக்கே போற்றி.